# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,561 — 1965 නොවැම්බර් 19 වැනි සිකුරාදා — 1965.11.19

14,561 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[அவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்யுவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 369 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 371 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 371 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 375 | நானாவித அறிவித்தல்கள் .. .. | 378 |


## பதவிகள்—வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப் டுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. **படிகள்.**—வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி எனபன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. **கேள்விக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக்கொமிஷனின் பிரமாணங்கள, நிதி ஒழுங்குவிதிகள, கருமமுறைக் கைநூலின ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் எனனும் இவற்றுடன் அரசாங்கம் காலநதோறும் பிறபபிககும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. **நியமன விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயததில் (நாள்வீதச் சமபளத்தில் இல்லாதவர்களையொழித்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுககு நியமிககப் படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிததை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினுல் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினுலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை அரசாங்கம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாது அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) "சந்தர்ப்பத்துக்குத் தக்கதாக இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்டு இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கு நியமிக்கப்படும்" புதிய உத்தியோகத்தர்களுக்குரிய தகுதிகாண்காலம் பரீட்சாகாலம் ஏதும் பதவிகளுக்குரிய அக்காலம் 3 ஆண்டுகளுக்கு மேலாகவிருக்கவேண்டும் என்று விதிக்கப் பட்டால் ஒழிய 3 ஆண்டுகளாகும்.

(ii) "புதிய உத்தியோகத்தர்" ஏற்கனவே இ[illegible] பிரமாணங்களுக்கு அல்லது அரசாங்கத்தின் மொழிக்கொ[illegible]கையை அமுல் நடத்துவதற்கு, அதிலும் விசேடமாக, 1956 ஆம் ஆண்[illegible] 33 ஆம் இல. அரசாங்க மொழிச்சட்டததின் ஏற்பாடுகளை நடைமுறையிற் கொண்டுவருதற்கு இனிச செய்யபபடக்கூடிய பிரமாணங்களுக்கு இயைய நடத்தல் வேண்டும்.

(iii) (அ) இவ்வுத்தியோகத்தர்கள் தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலததில்/பரீட்சாகாலத்தில் சிங்களமொழியறிவைப் பெறவேண்டும்.

(ஆ) தகுதிகாண்கால/பரீட்சைகால முடிவில் அவர்களின் நியமன ஊர்ஜிதம், வேறு விடயங்களுடன் சிங்கள மொழியில் ஓர் தேர்வுப்பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுததிருக்கும்.

தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்கள மொழியறிவுப் பரீட்சையில விதிககபபட்ட தரத்தை எய்தத் தவறுபவர்கள் பதவியிலிருநது நீககப்பட ஆளாவர்; ஆனுல் குறித்தவோர் உத்தியோகத்தர் அரசாங்க மொழியில் அறிவைப் பெறுவதறகு மனப்பூர்வமாக முயற்சித்திருககிறுர் எனறு நியமனம் செய்யும் அதிகாரி கருதுவாரானுல் குறித்த பதவி நீக்கம் பினபோடப்படலாம். உரிய திகதிக்குப்பின நியாயமான அளவு காலத்துக்குள் குறித்த உத்தியோகத்தர் குறித்த பரீட்சையிற் சித்தி எய்துவாரானுல், சிரேட்டத்துவம் இழப்பதும் இல்லாமற் போகலாம்.

(iv) சிங்கள மொழிமூலம் அரசாங்க உத்தியோகத்திற் சேர விரும்பும் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியறிவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்ற விதியிலிருந்து விலககளிக்கப்படுவர்.

குறிப்பு.—"புது உத்தியோகத்தர்" என்பது இங்கே, 1956 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்குப் பின் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களாய் 1957 ஆம் ஆண்டு, மே மாதம் 23 ஆம் திகதியைக் கொண்ட 379 ஆம் இல. திறைசேரிச் சுற்றுநிருபத்தின் உபபந்திகள் 2 (ii) (B), 2 (ii) (C) என்பனவற்றுக்கிணங்கப் பழைய உத்தியோகத்தர்களாயில்லாதவர்களைக் கருதும்.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப் பாதுகாப்புப்படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேரக் கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு, அவர்கள் குறித்த

படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்குமுன் சேர்ந்து இருத்தல் வேணடும். அததோடு அவர்கள ஆறறிய சேவை திருபதிகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருததல் வேண்டும்.

7. பிற விதிகள்.—(i) அரசாங்க சேவையிலுள்ள தகைமையுள்ள உத்தியோகத்தரது விண்ணபபங்கள் அனனவரின திணைக்களத்தலைவர் கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அத்தகைய உத்தியோகத்தர் விண்ணபபத்தின பிரதி ஒன்றை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக, முடிவுத் திகதியிலனறே அதன முனனரோ அதனைப் பெறக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களது விண்ணபபங்களை திணைக்களத் தலைவர்கள் அனுப்பும்போது குறித்த விண்ணபபதாரர்கள் (தெரிவு செய்யப்பட்டால்) விடுவிக்கப்படுவார்களா அன்ரு என்பதை கருமமுறைக் கைநூலின் 109 ஆம் பரிபாலன ஒழுங்கின் பிரகாரம் குறிப்பிடல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச்செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒனறைக் கொடுத்துச் சிபாரிசு செய்யலாம். ஆனுல் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலை யிட்டு, அவருக்கு ஆதாவுதேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையினமையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணபபத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாகிவிடும். தெரிவிக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தெரிவுசெய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப் படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங் கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

## சௌக்கியப் பகுதி

### பொதுச் சௌக்கிய மருத்துவ மாதர் பதவிக்கு நியமனம்

சௌக்கிய சேவைப்பகுதியில் நிலவும் பொதுச் சௌக்கிய மருத்துவ மாதர் பதவிகளை நிரப்புவதற்கு, 18 மாதப் பயிற்சி பெற்ற மருத்துவ மாதரிடமிருந்து விண்ணபபங்கள் கோரப்படுகினறன.

கீழ்க்காணும் மாதிரிப் பத்திரத்தில் உளளபடி விண்ணபபங்களைத் தயாரித்து "சௌக்கிய சேவை அதிபதி, தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு" என்ற விலாசமிட்டு, பதிவுசெய்யப்பட்ட தபால் மூலம் 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4 ந் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கத்தக்கதாக அவற்றை அனுப்புதல் வேண்டும். விண்ணபபங்களை அனுப்பும் காகித மேலுறையில் இடது மேல் மூலையில், "பொதுச் சௌக்கிய மருத்துவ மாதர் பதவிகளுக்கான விண்ணப்பம்" என எழுதப்படல் வேண்டும்.

2. சம்பளவிகிதமும் சேவை நிபந்தனைகளும்.—இப்பதவிகளுக்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் சம்பளம் பினவருமாறு :—ஆரம்ப சம்பளம் வருடம் ஒன்றுக்கு ரூபா 696—ரூபா 30 வீதம் 11 சம்பள உயர்வும், ரூபா 12 வீதம் 1 சம்பள உயர்வும் பெற்ற ஆகக்கூடிய வருடாந்தச் சம்பளம் ரூபா 1,038 ஆகும். (ரூபா. 906 ஐயும், ரூபா 996 ஐயும் பெற முன்பு திறமைக்கடப்புப் படிகள் உண்டு).

3. சேவை நிபந்தனைகள்.—இவை நிரந்தரமான உபகாரச்சம்பளத்துக் குரிய பதவிகள். எனினும் முதல் நியமன அரசாங்க சேவை சகாய நிதி அடிப்படையில் நியமனம் பெற்ற 10 ஆண்டுகளுள் 1957.4.29 ஆம் தேதியின, 372 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைப்படி உபகாரச் சம்பளத்திட்டத்துள் சேரும் தன்விருப்புரிமையைப் பிரயோகிக்கு முரிமையுடன் கொடுக்கப்படுகின்றது. தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் முதல் மூன்று ஆண்டுகளுக்குத்தகுதிகாண் நிலையிலிருப்பர். தேர்ந் தெடுக்கப்படுவோர் இலங்கையில் எப்பகுதியிலாவது சேவை செய்யத் தயாராயிருத்தல் வேண்டும். அன்றியும் நியமனகடிதத்தில் குறிப்பிட் டிருக்கும் நிபந்தனைகளுக்கு அமைவாய் ஒழுகல் வேண்டும். தேர்ந் தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் முதல் நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுக்காலங்களுக்குக் குறித்த திணைக்களத்தில் சேவை செய்வதென உடன்படிக்கை செய்வதற்குத் தயாராகவுமிருத்தல் வேண்டும்.

4. தேவையான தராதரங்கள்.—(அ) 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4 ந் திகதியன்று 35 வயதுககு மேற்படாதவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) பதிவுசெய்யப்பட்ட மருத்துவ மாதராக இருததல் வேண்டும். மருத் துவ மாதராகப் பயிற்சியிலீடுபட்டவர்களுக்கு விசேஷ சலுகை காட்டப்படும்.

5. உடைகள் (யூனிபோம்).—கடமையாற்றும் நேரங்களில் அணிவ தற்கு உடைகள் (யூனிபோம் வழங்கப்படும்).

6. விண்ணபபங்கள் எனது சொந்த விலாசத்திற்கோ, இப்பகுதியி லுள்ள வேறு எந்த உத்தியோகத்தரின் சொந்த விலாசத்திற்கோ அனுப்பப்படுதல் கூடாது.

7. மேற்கூறிய தகுதிகளைக் கொண்டிராத விண்ணபபங்கள் நிரா கரிக்கப்படும். அத்துடன் விண்ணபபதாரர்களுக்கு தனித்தனி அறி விக்கப்படவும் மாட்டாது.

8. கேட்கப்பட்டிருக்கும் சாட்சிப்பத்திரங்களின் மூலப்பிரதிகள் விண் ணப்பத்துடன் அனுப்பக்கூடாது. அவற்றின் நகல்கள் மாத்திரமே விண்ணப்பத்துடன் அனுப்பப்படல் வேண்டும். அத்தகைய சாட்சிப் பத்தி ரங்களின் நகல்களோ, மூலப்பிரதிகளோ (அனுப்பப்பட்டிருப்பின்) திருப்பி அனுப்பப்படமாட்டாது.

9. இந்த வர்த்தமானியில் (சுசற்) முதலாம் பாகம் இரண்டாம் பிரிவின் (ஆங்கிலம்) ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடும்படி கோரப்படுகிறது.

மி. யே. ஆர். முத்துக்குமாரு,
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

கொழும்பு,
1965 ம் ஆடு நவம்பர் மீ 18 ந் உ.

**விண்ணப்ப மாதிரிப் பத்திரம்**

1. முழுப் பெயர் :————.
   (தனித்தனி எழுத்துக்களில்)
2. விலாசம் :————.
3. பிறந்த திகதியும் வருடமும் :————.
   (பிறப்புப் பத்திரத்தின் நகல் இணைக்கப்படுதல் வேண்டும்).
   (உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களை அனுசரிக்கும் நோக்கமாக வழங்கப்பட்ட ஞானஸ்நானப் பத்திரம் அல்லது பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).
4. எந்த தேசப் பிரஜை :————.
5. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? :————.
   விவாகமானவராயிருந்தால் பின்வருவனவற்றைக் குறிப்பிடுக—
   (அ) கன்னிப் பெயர் :————.
   (ஆ) கணவனின் தொழிலும் வேலை செய்யும் இடத்தின் பெயரும் :————.
   (இ) பிள்ளைகளின் தொகை :————.
   மூத்த பிள்ளையின் வயது :————.
   இளைய பிள்ளையின் வயது :————.

(விவாகமான விண்ணபபதாரர்கள் தங்கள் கணவரிடமிருந்து, தங்கள் மனைவிமார்களை இப்பகுதியின் மருத்துவ மாதர்களாக நியமனஞ் செய் வதையிட்டுத் தஙகளுக்கு எந்தவிதமான ஆட்சேபனையுமில்லையென்ற விருப்பத்தைக் காட்டும் கடிதமொன்றை வாங்கிச் சமர்ப்பித்தல் வேண்டும்)

6. மருத்துவ மாதர்களுக்கான இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த திகதி :————.
   பயிற்சி பெற்ற பாடசாலையின் பெயர் :————.
   1. தாபனத்தின் பெயர் :————.
   2. வெளிக்கரும இடத்தின் பெயர் :————.
   (பெற்ற சாட்சிப்பத்திரத்தின் நகலை இணைக்குக).
   அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரங்களின் நகல்கள் இணைக்கப்படல் வேண்டும் :————.
7. கீழ்க்கண்ட பாஷைகளில் அறிவு உண்டா ?

| | வாசிப்பு | எழுத்து | பேச்சு |
|---|---|---|---|
| சிங்களம் | .. ———— | .. ———— | .. ———— |
| ஆங்கிலம் | .. ———— | .. ———— | .. ———— |
| தமிழ் | .. ———— | .. ———— | .. ———— |

8. முன்பு அரசாங்கத்தின் கீழ் ஏதாவது சேவையில் இருந்திருந்தால், வகித்த பதவிகளின் பெயர்களும், சேவையிலிருந்த திகதிகளும் : ————.
9. பதிற்கடமை பொதுச் சௌக்கிய மருத்துவ மாதாகக் கூப்பிட்டால் வேலை செய்ய உடனபடுகிறீரா :————.
10. மேல் குறிப்பிடப்பட்டுள்ள சேவை நிபந்தனைகளுக்கு உடன் படுகிறீரா :————.

11. நான் முன்பு ஒருபோதும் அரசாங்க சேவையிலிருந்து தகுதி யற்ற தன்மைக்காக விலகவோ, விலக்கப்படவோ இல்லையென்றும், நீதிமன்றத்தில் எந்தவிதமான குற்றச்சாட்டுக்களுக்காகத் தண்டிக்கப்பட வில்லை யென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இவை சம்பந்தமான பொய்யான உறுதி மொழிக்குத் தண்டனையாக, உட னடியாகச் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நான் உணருகிறேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி .————.

11-765—19.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,661

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

இல. 1/23/10/6 (ஜீ)

### மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையில் ஆட்சேர்ப்பதற்கு (ஆங்கில)ப் பரீட்சை

மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் (கீழ்த்தர) சேவையில் ஆட்சேர்ப்பதற்குப் பரீட்சையொன்று ஆங்கிலத்தில், பரீட்சைக் கொமிசனரினால் 1966, பெப்ரவரி மாதம் 5 ஆந் தேதி தொடக்கம் நடாத்தப்படும். இப்பரீட்சை பற்றிய முழு விபரங்களுக்கு, சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் காணப்படும் விளம்பரங்களை இவ்வரசாங்க வர்த்தமானியில் பார்க்க.

ச. எ. குறே,
திறைசேரி மேலதிகப் பிரதிச்செயலாளர்.

பொதுத் திறைசேரி,
கொழும்பு,
1965 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆந் தேதி.

11–742—19.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,561

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### சுகாதாரத் திணைக்களம்

#### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.—1966 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1966 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ம் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லாத இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம், ஏற்றுக்கொள்வார்.

2. (க) கேள்விக் கட்டுப்பணம்.—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பல நோக்குச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச் சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை, கேள்விப பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும்.

3. பெறுமதி விபரங்கள்.—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் கீழ்க்காணும் காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம்.—சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயங்கள் அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தறை, மாத்தளை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா, குருணாகல். கேள்விகள் முடப்படும் தினத்திற்கு முன்தினம் பகல் 12 மணிக்குப்பின் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டா.

தகுதி விபரங்களையோ, அல்லது நிதிநிலை நிருபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. தொகைகள்.—கீழ்க்காணும் அட்டவணையில 5 ம் பந்தியில உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. கேள்விகள் அனுப்பவேண்டியமுறை.—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம் என்று முகவரியிட்ட உறைகளில் வைத்து அனுப்பப்படவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடதுபக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ மூலையில் அனுப்புபவரின் பெயரும், முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது என்னிடமோ அல்லது கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. கேள்விகள் முடப்படுதல்.—கீழ் அட்டவணையின நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை பத்து மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் முடப்பெற்று உடனடியாக திறக்கப்படும்.

7. கேள்விகள் திறக்கப்படுதல்.—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனோ அல்லது எனது அதிகாரம்பெற்ற பிரதிநிதியுடனோ ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுணித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டுப் " பி " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச்செலவுத்தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப் பத்திரத்தில் அட்டவணை " பி " யில் உள்ள மேலதிகமான உணவுப்பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிடவேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி, அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும், விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

10. பிணை வைப்புப் பணங்கள்.—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 8 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப் பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. களஞ்சியத்திடுகை இடவசதி.—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. கேள்வி நிபந்தனைகள்.—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப்படிவத்தில் உள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்கவேண்டும்.

யாழ்ப்பாணம்,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 11 ந் உ.

எஸ். இராசரத்தினம்,
சுகாதார சேவை அத்தியட்சகர்.

குறித்த அட்டவணை

| (1) தாபனங்கள் | (2) கேள்விக் கட்டுப் பணம் | (3) பிணை வைப்புப் பணம் | (4) கேள்வி மூடப்படும் திகதி | (5) உணவுகள் அண்ணளவான தொகைகள் — வேலைக்காரர்கள்: மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | காய்கறி | நோயாளிகள்: மீன் | மாட்டிறைச்சி | கருவாடு | காய்கறி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | | | | | | | | |
| கோப்பாய் கி.வை.பி.வி. | 100 .. | 400 | 10.12.1965 | 600 .. | — .. | 600 .. | 900 .. | 1,900 .. | — .. | 1,900 .. | 3,000 |
| பூனகரி கி.வை.பி.வி. .. | 100 .. | .. 600 | மு.ப. 10 மணி | 400 .. | — .. | 400 .. | 1,900 .. | 300 .. | — .. | 400 .. | 1,600 |

11-470/1—19.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,561

## கல்விப்பகுதி

கீழ்க்குறிப்பிடப்படும் பாடசாலை வேலைகள் சம்பந்தமாகக் கேள்விப் பத்திரங்கள், கேள்விச் சபைத் தலைவரால் அக்கரைப்பற்று கல்விக் காரியாலயம், 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ம் திகதி வெள்ளிக் கிழமை மு.ப. 10.30 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் |
|---|---|
| அக்/சம்மாந்துறை முஸ்லிம் மஹா வித்தியாலயம் | அதிபர் விடுதி எஞ்சிய வேலை பூர்த்தி செய்தல் |

தேவையான பதிவு

ரூபா 6,000.00

(2) இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கல்விப்பகுதியினும் மேற்கூறப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட கொந்தருத்துக்காரருக்கு டிசம்பர் மாதம் 9 ந் திகதி பகல் 12.00 மணிவரையும் ஒவ்வொரு வேலைக்கும் கிழக்குப் பிராந்திய உதவி வித்தியாதிபதி கந்தோரிலோ, கொழும்பு 2 கல்விப்பகுதியிலோ அல்லது வெளியூராகில் அப்பகுதி கச்சேரியிலோ ஒவ்வொரு வேலைக்கும் 100 ரூபாய் கட்டுப்பணம் கட்டிக் கிடைக்கும் பற்றுச்சீட்டை அக்கரைப்பற்றுக் கல்வியதிகாரியிடம் சமர்ப்பித்துக் கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ளலாம். காசோலை, மணி ஓடர், போஸ்டல் ஓடர் ஆகியவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கட்டுப்பணம் கட்டுவதற்குத் தேவையான பத்திரங்களை கொழும்பு 2, கல்விப்பகுதி கிளையிலும், அக்கரைப்பற்று கல்வியதிகாரியிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். கட்டுப் பணம் கட்டவேண்டிய பத்திரங்கள் மேலே குறிப்பிட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்டதற்குரிய அத்தாட்சியைச் சமர்ப்பிப்போருக்கு மட்டுமே வழங்கப்படும்.

(3) அனுமதிக்கப்பட்ட சங்கங்களும் இரண்டாம் பிரிவில் குறிப்பிட்ட தொகைக்கு நீர்ப்பாய்ச்சல் பகுதியிலோ அல்லது பகிரங்க வேலைப்பகுதியிலோ அல்லது கல்விப்பகுதியிலோ பதிவு செய்யப்பட்டிருந்தால் மேற்கூறிய வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம். சங்கங்கள் பரிமாணப்பத்திரங்களை நிரப்பவேண்டியதில்லை. இச்சங்கங்கள் வேலைகளின் அளவைக்கேற்ப கல்விப்பகுதி மதிப்பீட்டுத் தொகைக்குச் செய்யச் சம்மதத்தை மட்டும் தெரிவித்தால் போதுமானது. அனுமதிக்கப்பட்ட சங்கங்கள் அவைகட்கு வழங்கப்படும் விசேட கேள்விப்பத்திரங்களில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். சங்கங்கள் கட்டுப் பணம்செலுத்த வேண்டியதில்லை. ஆனால் விசேட கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுமுன் இரண்டாம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்டதற்குரிய அத்தாட்சியைச் சமர்ப்பிக்கவேண்டும்.

(4) இரண்டாம் மூன்றும் பிரிவில் குறிப்பிட்டபடி இரட்டைப் பிரதியில் விண்ணப்பிக்கவேண்டிய கேள்விப்பத்திரங்கள் அக்கரைப்பற்றுக் கல்வியதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம். அன்னாரின் காரியாலயத்தில் வேலைகளுக்குரிய விளக்கப்படங்களையும் மேலதிக விபரங்களையும் பார்வையிடலாம். கேள்விப்பத்திரங்கள் பதிவுசெய்த தபால் மூலம் கேள்விச்சபைத் தலைவர், கல்விக் காரியாலயம், அக்கரைப்பற்று, என்ற விலாசமிட்டு அனுப்பவேண்டும். பதிவு செய்த தபால் மூலம் அனுப்ப விரும்பாத விண்ணப்பக்காரர்கள் நேரிலோ அல்லது பிரதிநிதிகள் மூலமோ சீல் பண்ணப்பட்ட கேள்விப்பத்திரங்களை அக்கரைப்பற்று கல்விக்காரியாலய உதவியாளரிடம் சமர்ப்பித்து அவைகளைப் பெற்றுக்கொண்டதற்கு அத்தாட்சியாக அவரிடம் கடிதம் பெற்றுக்கொளளுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் உறைகளின் மீது வேலைகளின் விபரங்களும் விண்ணப்பக்காரர் பெயரும் விலாசமும் எழுதப்படவேண்டும்.

(5) 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ந் திகதி மு.ப. 10.30 மணிக்கு விண்ணப்பப்பத்திரங்கள் திறந்து பரிசீலனை செய்யப்படும். விண்ணப்பப் பத்திரங்கள் பார்வையிடும்பொழுது விண்ணப்பக்காரர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர். பிரசன்னமாயிருக்கும் விண்ணப்பக்காரர்களுக்கு விண்ணப்பத்தொகைகளும், விண்ணப்பக்காரர்களின் பெயர்களும் வாசித்துக்காட்டப்படும்.

(6) விண்ணப்பம் முடிந்த திகதியிலிருந்து ஆறு வாரங்கள் வரையிலும் விண்ணப்பங்கள் செல்லுபடியாகவிருக்கும்.

(7) அக்கரைப்பற்றுக் கல்விக்காரியாலயத்தில் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். வேலை சம்பந்தமான தஸ்தாவேஜுகளையும் பார்வையிடவும் முடியும்.

(8) ஓடுகள் பாவிக்கவேண்டிய கட்டிடங்களுக்கு இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட ஓடுகளையே பாவிக்கவேண்டும். ஓடுகளின் தரத்தை நிச்சயப்படுத்த வேண்டியேற்பட்டால் அதற்கு வேண்டிய சோதனைகளை இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சிக் கூடத்தில் விண்ணப்பக்காரர்களின் செலவில் நடாத்தமுடியும்.

எம். எஸ். எம். ஹத்தாத்,
கல்வியதிகாரி, அக்கரைப்பற்று.

கல்விக்காரியாலயம்,
அக்கரைப்பற்று,
1965 ம் ஆண்டு நவம்பர் மீ 11 ந் உ.

11-682—19.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,561

## கல்விப் பகுதி

அக்./சம்மாந்துறை முஸ்லிம் மகா வித்தியாலயம். வேலைத்தலக் கட்டிட எஞ்சிய வேலையைப் பூர்த்தி செய்தல்.

மேற்படி வேலை சம்பந்தமாக 5.11.65 ந் திகதிய 14,550 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தைப் பார்க்கவும்.

மேற்படி வேலைக்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி 26.11.65, வெள்ளிக்கிழமை மு. ப. 10.30 மணிவரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எம். எஸ். எம். ஹத்தாத்,
கல்வி அதிகாரி, அக்கரைப்பற்று.

கல்வி அலுவலகம், அக்கரைப்பற்று,
1965 ம் ஆண்டு நொவம்பர் மீ 11 ந் உ.

11-416—19.11.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,561

## சுகாதாரத் திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.—1966 ம் ஆண்டு சனவரி மாதம் 1 ந் திகதி தொடக்கம் 1966 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ம் திகதி (இருநாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்கு பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சுகாதார சேவை அத்தியட்சகர், கேகாலை, ஏற்றுக்கொள்வார்.

(2) (க) கேள்விக் கட்டுப்பணம்.—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப்பணத்தை எந்த ஒரு கச்சேரியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதி பெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவு செய்த கூட்டுறவுச்சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேல் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச் சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை, கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்பவேண்டும்.

(3) பெறுமதி விபரங்கள்.—கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சுகாதார சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கீழ்க்காணும் காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம். சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயங்கள் அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு, கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தறை, புத்தளம், இரத்தினபுரி, வவுனியா, குருனாகல். கேள்விகள் மூடப்படும் தினத்திற்கு முந்தினம் நண்பகல் 12 மணிக்குப்பின் கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படமாட்டா.

தகுதி விபரங்களையோ அல்லது நிதி நிலை நிருபணத்தையோ அளிக்கத்தவறினால் கேள்விக்கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. தொகைகள்.—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத்தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சுகாதார சேவை அத்தியட்சகர், கேகாலை என்று முகவரியிட்ட உறைகளில் வைத்து அனுப்பவேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடதுபக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும், முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறையைப் பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில் இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம். அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால் அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச் சீட்டுத் தருவார்.

6. கேள்விகள் மூடப்படுதல்.—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10 மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாக திறக்கப்படும்.

7. கேள்விகள் திறக்கப்படுதல்.—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமூகமாயிருக்கலாம். சமூகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்கு கேள்விக்காரர்களின் பெயர்களும், தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுணித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்தபின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுணித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. கேள்விகள் பற்றித் தீர்மானித்தல்.—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாட்டுப் “ பீ ” அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச்செலவுத்தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தில் அட்டவணை “ சீ ” யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி, அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும், விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.—கேள்விக்காரர்கள் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்திலே பிரத்தியேகமாக அனுமதிவழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டுக் குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. பிணைவைப்புப் பணங்கள்.—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப்பணத்தைக் கட்டிய பின்பே, தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும்.

11. களஞ்சியத்திடுகை இடவசதி.—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு, தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. கேள்வி நிபந்தனைகள்.—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப்படிவத்தில் உள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

கேகாலை,
1965 ம் ஆண்டு நவெம்பர் மீ 11 ந் உ.

அ. ஜி. எச். தாபுறு,
பதில் சுகாதார சேவை அத்தியட்சகர்.

### குறித்த அட்டவணை

| 1 | 2 | 3 | 4 | 5 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தாபனங்கள் பகுதி காகல்ல | கேள்விக் கட்டுப் பணம் ரூபா | பிணை வைப்புப் பணம் ரூபா | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | உணவுகள் அண்ணளவான தொகைகள் | | | | | | | |
| | | | | வேலைக்காரர்கள் | | | | நோயாளிகள் | | | |
| | | | | மீன் | மா. இ. | கருவாடு | கா. க. | மீன் | மா. இ. | கருவாடு | கா. க |
| கண்டுப்பிற்றபற்று பி. வி. | 100 | 100 | 14.12.1965 மு. ப. 10 மணி | 170 | 170 | 170 | 680 | 300 | 300 | 300 | 1,270 |
| அல்கம | 100 | 300 | | 153 | 130 | 160 | 650 | 70 | 70 | 70 | 280 |
| புலத்கொகுபிட்டிய பி. வி | 100 | 400 | | — | 120 | 260 | 500 | — | 400 | 850 | 1,670 |
| ஹிங்குறுலாகந்தை பி.வி. | 100 | 300 | | — | 150 | 310 | 620 | — | 50 | 90 | 200 |
